பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

**24 12 2025** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** தேசிய அறிவியல் விருதுகளை 24 விஞ்ஞானிகளுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வழங்கினார்.

**2.** நாட்டில் அடுத்த 4 ஆண்டுகளுக்குள் மேலும் 75 ஆயிரம் இளநிலை மருத்துவ இடங்களை உருவாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

**3.** வட கிழக்கு மாநிலங்களில் மின்சார கட்டமைப்புகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருவதாக மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர் லால் கூறியுள்ளார்.

**4.** நாட்டின் அஞ்சல் கட்டமைப்புகள் நவீனமயமாக்கப்பட்டு வருவதாக தொலைத்தொடர்புத் துறை இணையமைச்சர் திரு. பெம்மசானி சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

**5.** தேசிய துப்பாக்கி சுடும் போட்டியில் 10 மீட்டர் கலப்பு குழு பிரிவில் ஹரியானா அணி தங்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தேசிய அறிவியல் விருதுகளை புதுதில்லியில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு நேற்று வழங்கினார்.

அறிவியல் துறையில் சிறப்பாக சேவையாற்றிய விஞ்ஞானிகளுக்கு விஞ்ஞான் ரத்னா, விஞ்ஞான் ஸ்ரீ, விஞ்ஞான் யுவா மற்றும் விஞ்ஞான் குழு ஆகிய நான்கு பிரிவுகளில் 24 விருதுகள் வழங்கப்பட்டன.

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமை கண்டுபிடிப்பு ஆகிய துறைகளில் தனிநபராகவும் குழுவாகவும் சிறப்பான பங்களிப்பை வழங்கிய விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் புதுமை கண்டுபிடிப்பாளர்களை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கப்படட்டுள்ளன.

இதில் தமிழகத்தைச் சேர்ந்த 3 விஞ்ஞானிகள் இந்த விருதைப் பெற்றனர்.

<<<<>>>>

மறைந்த முன்னாள் பிரதமர் பாரத ரத்னா அடல் பிஹாரி வாஜ்பாயின் நல்லாட்சி நிர்வாக நடைமுறை நாட்டிற்கு தொடர்ந்து உத்வேகம் அளித்து வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

அடல்பிஹாரி வாஜ்பாய் குறித்த நூல் ஒன்றை புதுதில்லியில் நேற்று வெளியிட்டுப் பேசிய அவர், நாட்டின் வளர்ச்சியில் அடல் பிஹாரி வாஜ்பாயின் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டதாக அவர் கூறினார்.

நிர்வாகத் தேவையைக் கருத்தில் கொண்டு சத்தீஸ்கட், உத்தராகண்ட் மற்றும் ஜார்கண்ட் மாநிலங்கள் வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

பழங்குடியினர் நலனுக்காக தனி அமைச்சகத்தை வாஜ்பாய் நிறுவியதாகவும், பிரதமரின் கிராம சாலைகள் திட்டம், தங்க நாற்கர சாலைத் திட்டம் போன்றவை அவரது ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்டதாகவும் குடியரசுத் துணைத்தலைவர் தெரிவித்தார்.

நல்லாட்சிக்கு உதாரணமாக வாஜ்பாய் திகழ்ந்ததால் அவரது பிறந்த தினம், நல்லாட்சி தினமாக கொண்டாடப்படுகிறது என்று திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறினார்.

<<<<>>>>

பஞ்ச்குலாவில் இன்று நடைபெறும் தேசிய கூட்டுறவு மாநாட்டை மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தொடங்கி வைக்கிறார்.

“கூட்டுறவின் மூலம் வளம் - நிலையான விவசாயத்தில் கூட்டுறவு அமைப்புகளின் பங்கு” என்ற தலைப்பில் இந்த மாநாடு நடைபெற உள்ளது.

தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களின் செயல்பாடுகளை விரிவுபடுத்துதல், சிறு குறு விவசாயிகளுக்கு அதிக கடன்களை வழங்குதல், தேசிய அளவிலான வேளாண் கூட்டுறவு நிறுவனங்களை வலுப்படுத்துதல் ஆகியவை குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது.

<<<<>>>>

நாட்டில் அடுத்த 4 ஆண்டுகளுக்குள் மேலும் 75 ஆயிரம் இளநிலை மருத்துவ இடங்களை உருவாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேசத்தின் தார் மற்றும் பேதுல் மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகளுக்கு நேற்று அவர் அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், கடந்த 11 ஆண்டுகளில் நாட்டின் மருத்துவக் கட்டமைப்புகள் பெரிய அளவில் மேம்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறினார்.

**2014-**ம் ஆண்டில் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை **387** ஆக இருந்தது என்றும் தற்போது அது **819** ஆக அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

**51** ஆயிரமாக இருந்த **MBBS** இடங்கள் தற்போது ஒரு லட்சத்து **28** ஆயிரமாக உயர்ந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசின் நடவடிக்கைகள் காரணமாக பேறு காலத்தில் தாய் சேய் இறப்பு விகிதம் பெருமளவு சரிந்துள்ளது என்றும் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மத்தியப்பிரதேச முதலமைச்சர் திரு. மோகன் யாதவ், மத்திய இணையமைச்சர்கள் திரு துர்கா தாஸ் உய்கே, திருமதி சாவித்திரி தாக்கூர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<>>>>

இளம் விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்த மத்திய விளையாட்டு அமைச்சகம் விரிவான பயிற்சி கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளதாக மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் இது தொடர்பான நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்தப் புதிய கொள்கையின் கீழ் தேசிய விளையாட்டு ஆணையம்

உள்ளிட்ட முக்கிய அமைப்புகள் மூலம் ஆண்டுதோறும் 452 பயிற்சிக்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும் என்று கூறினார்.

இது இளம் வீரர்களின் திறனை மேம்படுத்தி நாட்டின் விளையாட்டு சூழலை வலுப்படுத்தும் என்று அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் விளையாட்டு கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும், இத்துறையில் சீர்திருத்தங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<>>>>

வடகிழக்கு மாநிலங்களில் மின்சார கட்டமைப்புகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருவதாக மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர் லால் கூறியுள்ளார்.

வடகிழக்குப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும், அமைக்கப்பட்டு வரும் சுபன்ஸ்ரீ நீர் மின்திட்டத்தின் ஒரு பகுதியின் செயல்பாட்டை நேற்று அவர் கொணொலி மூலம் தொடங்கி வைத்தார்.

தேசிய நீர் மின் கழகம் நாட்டின் மின் தேவையைப் பூர்த்தில் செய்வதில் முக்கிய பங்காற்றி வருவதாக அவர் கூறினார்.

சுபன்ஸ்ரீ திட்டம் வடகிழக்குப் பகுதியில் எரிசக்தி விநியோகத்தை பெரிதும் மேம்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இத்திட்டம் உள்ளூர் மக்களுக்கு சமூக-பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

இத்திட்டம் முழுமையாக செயல்பாட்டுக்கு வரும்போது 2 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த திட்டம் நாட்டின் பொறியியல் சிறப்புக்கு எடுத்துக்கட்டாகத் திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

எஞ்சியுள்ள அலகுகளை விரைந்து செயல்பாட்டுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளை திரு மனோகர் லால் கேட்டுக் கொண்டார்.

<<<<>>>>

நாட்டில் அஞ்சல் கட்டமைப்புகள் நவீனமயமாக்கப்பட்டு வருவதாக தொலைத் தொடர்புத் துறை இணையமைச்சர் திரு. பெம்மசானி சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

அஞ்சல் வட்டங்களின் செயல்திறன் குறித்து புதுதில்லியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் அவர் பங்கேற்றுப் பேசினார்.

நாட்டின் அஞ்சல் கட்டமைப்பகள் எடுத்துரைத்த மத்திய அமைச்சர், உள்ளூர் தன்மைகளைக் கருத்தில் கொண்டு வளர்ச்சிக்கான

உத்திகளை செயல்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

அஞ்சல் மற்றும் பார்சல் செயல்பாடுகளை மேலும் மேம்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

அஞ்சலகங்களில் சேமிப்பு மற்றும் காப்பீடு உள்ளிட்ட நிதிச் சேவைகள் மூலமாக மேலும் அதிக மக்கள் பயன்பெறும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

திறன் வாய்ந்த சேவைகள், வலுவான டிஜிட்டல் கட்டமைப்பு ஆகியவை அஞ்சல் துறையை நவீனமாக மாற்றி அமைத்துள்ளதாக திரு பெம்மாசானி சந்திரசேகர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு கிடைத்த வெற்றி அடுத்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் மாநிலங்களிலும் தொடரும் என்று பிஜேபி செயல்தலைவர் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

பட்னாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், நாட்டின் வளர்ச்சியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு பிஜேபி செயல்படுவதாகத் தெரிவித்தார்.

மக்கள் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

இத்திட்டங்கள் குறித்து பிஜேபி தொண்டர்கள் நாடு முழுவதும் மக்களுக்கு விரிவாக எடுத்துரைக்க வேண்டும் என்று திரு. நிதின் நபின் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

வட மாநிலங்களில் கடும் குளிர் தொடர்ந்து நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பிஹார், தில்லி, ஹரியானா, சண்டிகட், பஞ்சாப், உத்தரப்பிரதேசம், ஹிமாச்சலப்பிரதேசம், ஜம்மு-கஷ்மீர், ஜார்கண்ட் மற்றும் மத்தியப்பிரதேசத்தில் கடும் பனிமூட்டம் நிலவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு-கஷ்மீர், உத்தராகண்ட், ஹிமாச்சலப்பிரதேசம் மற்றும் அந்தமான் நிகோபாரின் சில இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் ஒருசில இடங்களில் இன்று லேசான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மாநிலத்தின் பல்வேறு இடங்களில் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பைவிட இரண்டு டிகிரி செல்சியஸ் குறையக்கூடும் என்று அந்த அமையம் கூறியுள்ளது.

இதனிடையே நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து உறைபனி நிலவி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Saravanan - 53 Sec)**

<<<<>>>>

தேசிய துப்பாக்கி சுடும் போட்டியில் **10** மீட்டர் கலப்பு குழு பிரிவில் ஹரியானா அணி தங்கம் வென்றது.

போபாலில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஹரியானா அணி - மகாராஷ்டிரா அணியை **16-12** என்ற புள்ளிக் கணக்கில் வென்றது.

----------------

விஜய் ஹஸாரே கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

அகமதாபாதில் நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் தமிழ்நாடு அணி - புதுச்சேரியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**